பக்கங்கள் 14 + 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 17 சனிக்கிழமை 31.05.2024 | அதிர்வு 301

## பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படாது!

**லால் காந்தவும் தெரிவிப்பு**



பிரதமர் பதவியில் மாற்றம் வராது எனவும், தேசிய மக்கள் சக்தி மேலும் விஸ்தரிக்கப்படும் எனவும் அமைச்சர் லால் காந்த தெரி

02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## பேராசிரியராக பதவி உயர்வு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

02▶



### தேசிய மக்கள் சக்தியின்

# யாழ். மாநகர உறுப்பினராக கபிலன் இன்று உறுதியுரை!

## வழக்குத் தொடுப்பாரா சுமந்திரன்?

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினராக முன்னாள் விரிவுரையாளர் சுந்தரமூர்த்தி கபிலன் இன்று உறுதியுரையைச் செய்தார்.

02▶







## போதைப்பொருள்களுடன் யாழில் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் மற்றும்ஐஸ்போதைப்பொருள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

02▶

## இளைஞர் ஒருவர் வெட்டிக்கொலை

**மேலும் இருவர் படுகாயம்**




இளைஞர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி – எஹெலியகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலுள்ள ரயில் கடவைக்கு

02▶

# கனரக வாகனம் மோதி வயோதிபர் ஒருவர் பலி!

**பாரதிபுரத்தில் சோகம்**



திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங்கேணி – பாரதிபுரத்தில் கனரக வாகனம் மோதி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சைக்கிளில் சென்ற 72 வயதுடைய வயோதிபர், கனரக வாகனத்தில் மோதி படுகாயமடைந்த நிலையில் கிண்ணியா தள வைத்திய சாலையில் நேற்று

வெள்ளிக்கிழமை அனும

02▶

# 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு



இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஐந்து மாவட்டங்களுக்கான மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கையானது இன்று சனிக்கிழமை மாலை 4 மணி முதல் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி வரை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் பின்வருமாறு:-

- காலி மாவட்டம் – பத்தேகம பிரதேச செயலகப் பிரிவு
- கேகாலை மாவட்டம் – அரநாயக்க
- நுவரெலியா மாவட்டம் – அம்பகமுவ, நோர்வூட் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள்
- இரத்தினபுரி மாவட்டம் – இரத்தினபுரி பிரதேச செயலகப் பிரிவு
- கண்டி மாவட்டம் – மேல் கோரளை பிரதேச செயலகப் பிரிவு

## யாழ். மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்குத் தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவாகியுள்ள

உறுப் பினர்களின் உறுதியுரையேற்பு நிகழ்வு இன்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போதே தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் தங்கள் உறுதியுரையை மேற்கொண்டார்கள்.

இதில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாநகர மேயர் வேட்பாளராகப் போட்டியிட்ட (விகிதாசாரப் பட்டியல் வேட்பாளர்) சுந்தரமூர்த்தி கபிலனும் யாழ். மாநகர சபை உறுப்பினராக உறுதியுரையை மேற்கொண்டார்.

எதிர்வரும் நாள்களில் உள்ளூராட்சி சபைகளில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய வர்த்தமானி இன்று வெளிவந்துள்ளது.

"யாழ். மாநகர எல்லைக்குள் வசிக்காத தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாநகர மேயர் வேட்பாளர் கபிலன் மேயராக அல்ல யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினராகக் கூடப் பதவி வகிக்க முடியாது. உறுப்பினராக நியமித்த வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்த அடுத்த நாளே அதனைத் தடுப்பதற்கு வழக்குத் தாக்கல் செய்வோம். அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளது." – என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னர் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பேராசிரியராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞான பீடத்தின் பௌதிகவி யல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரைப் பேராசி ரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை இன்று ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் இன்று சனிக் கிழமை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த பௌதிகவியல் துறை யைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுதர்சினி உபேந்திரனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவு ரையாளர் கலாநிதி சுதர்சினி உபேந் திரன் பௌதிகவியலில் பேராசிரி யராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

## போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைக் கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப் படையில் வீடு ஒன்றைச் சுற்றிவளைத்து சோதனை நடத்தியபோதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 15 கிராம் ஹெரோயின் மற்றும் 2 கிராமம் ஐஸ் போதைப்பொருள்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி நபர் ஏற்கனவே போதைப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நிலு வையில் உள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் இவர் சுன்னாகம் பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தவர் எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரைப் பொலிஸ் நிலையத் தில் தடுத்து வைத்து சுன்னாகம் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருகில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மேலும் இருவர் படுகாயமடைந்துள் ளனர்.

இத்தமல்கொட, கட்டஹட்ட பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வன்முறைக் கும்பல் ஒன்று மூன்று நபர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியது.

காயமடைந்தவர்கள் எஹெலியகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர்களில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மற்றைய இருவரும் மேலதிக சிகிச் சைக்காக இரத்தினபுரி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் எஹெலியகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்வது தொடர்பில் எஹெலியகொட பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

தேசிய மக்கள் சக்திக்குள் மோதல் மூண்டுள்ளது எனவும், பிரதமர் பதவியை மாற்றுவதற்காக அமைச்சரவை மறுசீர மைக்கப்படவுள்ளது எனவும் தகவல்கள் பரப்பப்பட்டு வரும் நிலையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய மக்கள் சக்திக்குள் உள்ளக மோதலாம், அமைச்சரவையும் மாற்றப் படவுள்ளதாம் என்றெல்லாம் கருத்துக் களை முன்வைப்பவர்களின் மூளையை நிச்சயம் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். எதிரணி என்றால் எதையாவது கூற வேண்டும் என்பதற்காகவே இப்படியான கதைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அவை அப்பட்டமான பொய்யாகும்.

தேசிய மக்கள் சக்தி மேலும் விஸ்தரிக் கப்படும். உள்ளூராட்சி சபைத் தேர்தல் அதற்கான வாய்ப்பாக அமைந்துள் ளது. கொழும்பு மாநகர சபையில் எமது ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது." – என்றார்.

## கனரக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திக்கப்பட்டார்.

இந்நிலையில், இன்று சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களைக் கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் .

# இலங்கையில் தடை செய்யப்பட்ட 15 அமைப்புகள், 217 நபர்களின் பெயர்களை அறிவித்து புதுப்பிக்கப்பட்ட வர்த்தமானி வெளியீடு!

இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்புகள் மற்றும் நபர்களின் பெயர்களை அறிவித்து புதுப்பிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்யகொந்தாவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

15 அமைப்புகள் மற்றும் 217 நபர்களின் பெயர் விவரங்கள் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன்படி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, உலகத் தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலகத் தமிழர் நிவாரண நிதியம், கனேடிய தமிழர் தேசிய அவை மற்றும் டி.வை.ஓ. என அறியப்படும் தமிழ் இளைஞர் அமைப்பு ஆகியன இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் எக்சியூ என்று அறியப்படுகின்ற தலைமையகக் குழு, தேசிய தௌஹித் ஜமாத், ஜமாதே மிலாதே இப்ராஹிம், விலயாத் அஸ் செயிலானி, டருள் ஆதர் அத்துபவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம் மற்றும் சேவ் த பேர்ளஸ் ஆகியனவும் இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இது பெரும் அபத்தம்!

''நோய்நாடி நோய்முதல் நாடி
அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.''

- என்றான் செந்நாப் போதகன் திருவள்ளுவப் பெருந்தகை.

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும் என்பது இக்குறளின் கருத்து. உடல் நோய்க்கு மட்டுமின்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும் என்பது கலைஞர் கருணாநிதியின் உரை.

இலங்கை ஆட்சியாளர்களுக்கு இது புரியாமல் இருப்பது - அல்லது புரிந்தும் புரியாத மாதிரி நடிப்பது - இலங்கையின் பெரும் துரதிஷ்டம்.

அரசியல் அனுசரணையால் உருவாகியிருந்த குற்றங்கள் நிறைந்த நாட்டுக்குப் பதிலாக, நல்லதொரு நாடாக இலங்கையை சர்வதேசத்தில் உயர்த்தி வைப்பதற்காகத் தனக்கு வழங்கப்பட்டிருக்கும் கைவிட முடியாத பொறுப்பைத் தாம் தமது உயிரைத் துச்சமாகக் கருதிச் செய்து முடிப்பார் என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க உறுதியளித்திருக்கின்றார்.

கல்கிரியாகம, பஹமினியாகம சிறி சமாதி விகாரையின் தாது வளாகம் மற்றும் சிலை திறப்பு நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை இயற்கை வளங்களினால் நிறைந்த தன்னிறைவான நாடாக இருந்த போதிலும் முன்னைய ஆட்சியாளர்களின் திட்டமிடாத செயற்பாடுகள் காரணமாக நாட்டுக்கு அபிவிருத்தி கிட்டாமல் போயுள்ளது என்று கூறிய ஜனாதிபதி, தற்போதைய அரசாங்கம் படிப்படியாக நிலையானதாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிறது என்றும் கதை விட்டிருக்கின்றார்.

ஆட்சி அதிகாரத்துக்கு வந்த முன்னைய ஜனாதிபதிகள் எல்லாம் இப்படித்தான் கூறினார்கள். சந்திரிகா இரண்டாவது தடவை பதவி ஏற்க முன்னர் பெரும் குண்டு தாக்குதலில் அருந்தப்பில் தப்பினார். மஹிந்த ராஜபக்ஷவும் கோட்டாபய ராஜபக்ஷவும் இத்தகைய உயிர் ஆபத்துக்களை எந்நேரமும்எதிர்கொண்டவர்கள்தான். மைத்திரிபால சிறிசேன கூட 'கரணம் தப்பினால் மரணம்' என்ற நிலையில் தான் தாம் ஜனாதிபதியானார் என்பதை அப்போதே குறிப்பிட்டார். எனவே எல்லா ஜனாதிபதிகளும் உயிரை துச்சமாக மதித்துதான் பதவிக்கு வந்தார்கள் என்று பிரலாபிப்பது வழமை. ஆக, அநுரகுமார திஸநாயக்க மட்டும் அப்படி வந்தவர் என்பதல்ல.

ஆனால் பொருளாதாரத்தில் நாடு சீரழிந்து போனமைக்கு முன்னைய அரசியல் தலைமைகளின் தவறான நிர்வாகம், ஊழல், மோசடிகள், முறைகேடுகள் போன்றவை மட்டும் காரணமல்ல. அதை மாத்திரம் திருத்தினால் நாடு மீண்டெழுந்து விடும் என்பதுமல்ல.

நாட்டில் ஏழரை தசாப்தங்களுக்கு மேல் தீர்க்கப்படாமல் நீண்டு இழுபடும் இனப் பிரச்சினையே இலங்கையின் இந்த சீரழிவுக்கு அடிப்படைக் காரணம். அதுதான் நாட்டின் இந்தத் தீராப் பிணியின் மூலம். நோய்க்கான ஊற்றுக்கண். அந்த நோயின் பெறு பேறாக வெளிப்பட்ட குணம் குறிதான் இந்த பொருளாதார சீரழிவுகளும், ஊழல், மோசடிகளும் முறைகேடுகளும்.

ஆகவே நோயின் மூலத்தைக் கண்டு பிடித்து அதைத் தணிக்கும் வழியைச் செய்யாமல் அந்த நோய் வெளிப்படுத்தும் குணம், குறிக்கு வைத்தியம் செய்ய முயல்கிறார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

இது நாட்டின் பெரும் சீரழிவு என்ற நோய்க்கு நிரந்தர தீர்வாகப் போவதில்லை. நிரந்தர தீர்வாக அமைய முடியாத ஒன்றை தாம் வெட்டிப் புடுங்கி நாட்டுக்குத் தரப்போகின்றார் என ஜனாதிபதி கயிறு விடுவது பெரும் அபத்தம்.



# மெல்பேர்ணில் அக்கினிக் குஞ்சு வாழ் நாள் சாதனையாளர் விருது!

**(ஐங்கரன் விக்கினேஸ்வரா)**

மெல்பேர்ணில் இசையருவி பாடல் போட்டியும், அக்கினிக் குஞ்சு இணையத் தளத்தின் பதினைந்தாவது ஆண்டு விழாவும் நடைபெற்றன.

அக்கினிக் குஞ்சு இணையத்தளத் தின் பதினைந்தாவது ஆண்டு விழாவில் இசையருவி பாடல் போட்டி, உள்ளூர் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களைக் கௌரவித்தல், இசையருவி இசை நிகழ்ச்சியுடன் மிகப் பிரமாண்டமாக நடைபெற்றன.

கடந்த பதினைந்து வருடங்களாக அக்கினிக் குஞ்சு மின்னிதழாகத் தொடர்ந்து வெளிவருகின்றமை குறிப் பிடத்தக்கது. இந்த வருடம் மெல்பேர்ணில் நடைபெற்ற நிகழ்வில் பல இலக்கிய அறிஞர்களுக்கும் இசை கலைஞர்க ளுக்கும் வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் எஸ்.பொ. நினைவு விருதை மூத்த எழுத்தாளர் லெ. முருக பூபதியும், கவிஞர் அம்பி நினைவு விருதை மகாதேவ ஐயர் ஜெயராய சர்மாவும் பெற்றுக்கொண்டனர்.

ஆஸ்திரேலியாவில் தமிழ் இலக்கி யத்துக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதை எழுத்தாளர் கிறிஸ்டி நல்ல ரெத்தினம், எழுத்தாளர் ஐங்கரன் விக்கி னேஸ்வரா, சட்டத்தரணி சந்திரிகா சுப்ர மணியம் ஆகியோர் பெற்றுக் கொண் டனர்.

அத்துடன் வானொலி ஒலிபரப்புப் பணிக்காக எட்வேட் அருள்நேசதாசன், ரமேஷ் பாலகிருஷ்ணர் ஆகியோர் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றுக் கொண்டனர்.

இசைப் பணிக்காக ரொகான் அலோசியஸ், ரவீந்திரன் சதீஸ்குமார், இரமா சிவராஜா, சுமதி சத்தியமூர்த்தி ஆகியோர் வாழ் நாள் சாதனையாளர் விருதைப் பெற்றுக் கொண்டனர்.

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன், அதை அங்கொரு காட்டிலோர் பொந் திடை வைத்தேன், வெந்து தணிந்தது காடு, தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ? என முழங்கிய மகாகவி பாரதியாரின் சொல்லின் வீரியத்தை ஆஸ்திரேலிய மண்ணில் கடந்த பதினைந்து வருடங்களாக 'அக்கினிக் குஞ்சு' இணைய தளத்தை செவ்வனே நடத்தி வரும் யாழ். பாஷ் கரின் ஒருங்கிணைப்பில் இந்த நிகழ்ச் சிகள் நடைபெற்றன.

அக்கினிக்குஞ்சு 1990 களில் ஆஸ்திரேலியாவில் இருந்து மாதாந்தம் அச்சில் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இதன் ஆசிரியராக யாழ். பாஸ்கர் நீண்ட காலமாக செயற்பட்டு வந்தார். புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களின் கலாச்சார சஞ்சிகை என அறிவித்து அனைத்து வகையான படைப்புக்களை யும் தாங்கி வெளிவந்தமை குறிப் பிடத்தக்கது.








# திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டம் பாடசாலையில் ஆரம்பம்



(பாறுக் ஷிஹான்,
நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பு 'மாணவர் மகிமை' வேலைத் திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளின் திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதற்கமைய நிந்தவூர் கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட நிந்தவூர் அல் – மஸ்லம் வித்யாலயத்துக்கு ஒரு தொகுதி திண்மக் கழிவகற்றும் தொட்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இது தொடர்பான நிகழ்வு நிந்தவூர் அல் மஸ்லம் வித்யாலய மண்டபத்தில் அதிபர் இஷட் அகமட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஐ .எம். நிஸ்மி, செயற்பாட்டு பணிப்பாளர் ஏ. புஹாது ஆகியோர் கலந்து கொண்டு திண்மக் கழிவகற்றலுக்கான பிளாஸ்டிக் தொட்டிகளை வழங்கினர்.





# மாணவர்களுக்கு சிறுநீரகத் தொற்று நோய்கள் ஏற்படும் அபாய நிலைமை!

## சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

பாடசாலைகளில் உள்ள கழிவறைகள் உரிய முறையில் துப்புரவு செய்யப்படாமலும் கவனிக்கப்படாமலும் சுகாதார முறைப்படி பேணப்படாமலும் உள்ளமையால், மாணவர்கள் கழிவறைகளைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டாமல் உள்ளனர்.

இந்த நிலையில் மாணவர்கள் சிறுநீரகத் தொற்று நோய்கள், சிறுநீரகக் கல் போன்ற நோய்கள் ஏற்படும் அபாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்தப் பிரச்சினைகள் மிகவும் அவசரமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆரோக்கியமற்ற நிலைமைகள் காரணமாக சிறுநீரக நோய்கள் ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்ய நமது குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சூழலை நடைமுறைப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

இவ்வாறு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றையும் அவர் வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மைக் காலமாகப் பிராந்தியத்திலுள்ள பாடசாலைகளைக் கண்காணிக்கச் சென்றவேளை மாணவர்கள் பாடசாலையிலுள்ள கழிவறைக்குச் செல்ல ஆர்வம் காட்டாமல் இருப்பதை அறியக்கிடைத்தது.

அசுத்தமான மற்றும் துர்நாற்றம் வீசும் கழிவறைகளே இதற்கு முக்கிய காரணம் என தெரியவந்தது. மலசல கூடங்களை சுத்தப்படுத்த ஆளணிப் பற்றாக்குறை மற்றும் அதற்கான போதிய நிதி உதவி இன்மை போன்ற குறைகள் உள்ளன என்று விசாரணைகளில் அறிய முடிகிறது.

இதனால் மாணவர்கள் கழிவறைக்குச் செல்லத் தயங்குவதுடன் சிறுநீரை அடக்கி வைத்துக்கொள்ளப்பழகிக்கொள்கின்றனர். இதனால் அவர்களுக்கு, சிறுநீர் தொற்று, சிறுநீரக கற்கள் போன்ற நோய்கள் ஏற்படும் நிலைமை உள்ளது.

இந்தப் பிரச்சினைகள் மிகவும் அவசரமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியதுடன் ஆரோக்கியமற்ற நிலைமைகள் காரணமாக சிறுநீரக நோய்கள் ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்ய நமது குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சூழலை நடைமுறைப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

இதுகுறித்து பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு மற்றும் பெற்றோர்கள் கவனம் செலுத்தி அதிபருடன் கலந்துரையாடி துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மாணவர்களின் சிறுநீரக நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.- என்றுள்ளது.

# கற்பிட்டியில் டெங்கு ஒழிப்பு கலந்துரையாடல்

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)



கற்பிட்டியில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மங்கள ராமநாயக்க தலைமையில் வியாழக்கிழமை கற்பிட்டி பிரதேச சபையின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர், கற்பிட்டி பொலிஸ் நிலைய அதிகாரிகள், கற்பிட்டி விஜயா கடற்படை பிரிவின் தளபதிகள், கற்பிட்டி கோட்டக் கல்வி பணிமனையின் அதிகாரிகள், கற்பிட்டி தள வைத்தியசாலை அதிகாரிகள், கற்பிட்டி பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இதில் கற்பிட்டி பிரதேசத்தில் அதிகரித்துவரும் டெங்கு நோயாளர்கள் தொடர்பாகவும் பிரதேச மக்கள் தமது சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைப்பதற்கு மக்களுக்கான தெளிவூட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் எவ்வாறான முறைகளில் வழங்குவது மற்றும் பாடசாலை மட்டத்தில் எவ்வாறான விழிப்பூட்டல்களை மேற்கொள்வது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. அதற்கான செயற்றிட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மும்முரமாக முன்னெடுக்கப்படும் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பிரதேசத்தில் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை வீடுகள், இராணுவ முகாம், பல்கலைக்கழக வளாகம் என்பனவற்றில் முன்னெடுக்கப்பட்டு வரகிறது. புகைவிசிறும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் வழிகாட்டலில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம். எம். நௌசாத் தலைமையில் கள நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து இனம் காணப்பட்ட இடங்களுக்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த புகைவிசிறும் நடவடிக்கை முன்னெடுக்க அறிவுறுத்தினர்.

இராணுவப் பொறுப்பதிகாரியின் கோரிக்கைக்கு இணங்க மல்வத்தை இராணுவ முகாம் மற்றும் பீடாதிபதி எம்.எச்.ஹாரூன் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக கணித விஞ்ஞான பீடத்திலும் அதன் விடுதியிலும் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து மேற்பார்வை உத்தியோகத்தர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், நுளம்பு கட்டுப்பாட்டு பணியாளர்கள் நிகழ்வுகளின் பின்னர் டெங்கு நுளம்பு பரவலை தடுக்கும் நடைமுறையில் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்துத் தெளிவுபடுத்தினர்.






# மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவு; கடை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை!

(பாறுக் ஷிஹான்)

பொதுமக்களுக்குச் சிறந்த மற்றும் பாதுகாப்பான உணவுப் பொருள்களை வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு சம்மாந்துறை சுகாதாரப் பிரிவினர் உணவு நிலையங்களில் அதிரடிப் பரிசோதனைகளை மேற்கொண்டு ஆறு கடை உரிமையாளர்கள் மீது வழக்கு தாக்கல் மேற்கொண்டனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட இனிப்புக் கடைகள், பலசரக்குக் கடைகள் மற்றும் கோழி இறைச்சிக் கடைகள் என்பன இவ்வாறு கடந்த புதன்கிழமை (28) பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது காலாவதியான மற்றும் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த ஆறு கடை உரிமையாளர்கள் மீது உணவுச் சட்டத்தின் கீழ் வியாழக்கிழமை (29) வழக்குத் தொடரப்பட்டது.

இதன் போது சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் ஆறு கடை உரிமையாளர்களில் நான்கு பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். மன்றுக்குச் சமூகமளிக்காத இரு வர்த்தகர்களுக்கும் வேறு ஒரு திகதி நீதிமன்றத்தால் தவணை அறிவிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் வழிகாட்டலில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம். நௌசாத் தலைமையில் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர், சுகாதார ஊழியர்கள் முன்னெடுத்த வருகின்றனர்.



# பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலய பொதுக்கூட்டத்தை ஜூன் 14 இல் நடத்துக!

## கல்முனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி இணக்கத் தீர்ப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கல்முனை பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய பொதுக் கூட்டத்தை எதிர்வரும் ஜூன் மாதம் 14 ஆம் திகதி நடத்தவேண்டும். இந்தப் பொதுக் கூட்டத்துக்கு இரண்டு கிழமைகளுக்கு முன்னர் அது தொடர்பான அறிவிப்புகளைச் சகலருக்கும் வழங்க வேண்டும்.

கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எம். எம்.றியாழ் இந்த இணக்கத் தீர்ப்பை வழங்கினார்.

பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலய நிர்வாகம் தொடர்பான வழக்கு கடந்த (14) நீதிபதி எ.எம்.எம். றியாழ் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப் பட்டது.

இ.மதனகாந் உள்ளிட்ட 11 மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி நதீர் சட்டத்தரணி மிப்றா ஆகியோர் ஆஜராகினர்.

அம்பாறை அரச அதிபர், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் மற்றும் சு.சுரேஸ், சி.ஈஸ்பரன் ஆகிய பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணி ஏ. ஆர். எம். கலீல், சட்டத்தரணி பாத்திமா உடன் சட்டத்தரணி அப்பாஸ், அரச தரப்பு சட்டத்தரணி பிரஷாந்தனுடன் சட்டத்தரணி ராசிமும் வருகைதந்திருந்தனர்.

இந்த வழக்கில் மனுதாரர்கள் மற்றும் பிரதிவாதிகள் ஆகியோர் இந்த வழக்கின் பிணக்கைச் சில நிபந்தனைகளின் பிரகாரம் சுமூகமான முறையில் தீர்த்துக் கொள்ள இருப்பதாக மன்றுக்கு தெரிவித்தனர். அதனை அடுத்து நீதிபதி றியாழ் இணக்கத் தீர்ப்பை வழங்கினார்.

தற்சமயம் குறித்த ஆலயத்தின் பரிபாலன சபையாக செயற்பட்டு வரும் சபையானது ஆலயம் தொடர்பான பொதுக் கூட்டத்தை ஜூன் 14 ஆம் திகதி நடத்துவது என்றும், இந்தப் பொதுக் கூட்டத்துக்கு இரண்டு கிழமைகளுக்கு முன்னர் அது தொடர்பான அறிவிப்புகளை சகலருக்கும் வழங்குவது எனவும் இணக்கம் காணப்பட்டது .

இந்த பொதுக்கூட்டமானது அந்த ஆலயமானது அமைந்துள்ள பகுதிக்கு பொறுப்பாக உள்ள பிரதேச செயலாளரின் அல்லது குறித்த பிரதேச செயலகத்தை சேர்ந்த கலாச்சார உத்தியோகத்தரின் மேற்பார்வையில் அல்லது கண்காணிப்பின் கீழ் நடத்துவது எனவும் இணக்கம் காணப்பட்டது .

மேலும் கல்முனை மாவட்ட நீதிமன்ற பதிவாளர் அவர்களும் குறித்த தினத்தில் அவ்விடத்தில் பிரசன்னம் ஆகி இருக்க வேண்டும் என்றும் அவர் அங்கு நடைபெற்ற கூட்டம் தொடர்பிலான அறிக்கையை மன்றுக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் இணக்கம் காணப் பட்டது.



# பண்பாட்டுப் படுகொலைச் சாட்சியங்கள்: நெருப்பினில் கருகிய யாழ். நூலகம்!

## தீயில் சாம்பலான ஓலை சுவடிகள்!!

**(தமிழ் மக்களின் பண்பாட்டு அறிவுப் பெட்டகமாகவும், அணையாத அறிவாலயமாக மிளிர்ந்த யாழ். நூலகம் அரச பயங்கரவாத உச்சத்தில் 1981 ஜூன் 1 ஆம் திகதி தீ மூட்டி எரிக்கப்பட்டது.)**



**● ஐங்கரன் விக்கினேஸ்வரா**

அடக்குமுறை அரசுகளின் தொடர்ச்சியான 1958, 1977 , 1883 இல் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாகவே யாழ். நூலகமும் தீக்கிரையானது.

இந்தச் செயல்கள் அனைத்தும் அரசின் திட்டமிடப்பட்ட செயலாகவே அமைந்தன. யாழ். எம்.பியின் வீடு, ஈழநாடு பத்திரிகை அலுவலகம், நகர வர்த்தக நிலையங்கள், ஆகியனவும் நாச்சிமார் கோவிலும் இந்தக் கால வேளையில் எரித்து நிர்மூலமாக்கப்பட்டன. இந்த எரிப்புகள் எல்லாவற்றிலும் மேலாக யாழ். நூலகம் எரிக்கப்பட்டதே தமிழ் பேசும் மக்களின் பாரிய இழப்பாகும்.

தமிழ் மக்களின் பண்பாட்டு அறிவுப் பெட்டகமாகவும், அணையாத அறிவாலயமாக மிளிர்ந்த யாழ். நூலகம் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இளம் சீடர் காமினி திசநாயக்கவின் மேற்பார்வையில் அரச பயங்கரவாத உச்சத்தில் 1981 ஜூன் 1 ஆம் திகதி தீ மூட்டி எரிக்கப்பட்டது. இது ஒரு கொடூர நாளாகும்.

தென்கிழக்காசியாவில் முதன்மையாக விளங்கியது இந்தப் பொதுசன நூலகம். மேலும் சர்வதேச நூலக மட்டங்களுடனும் யாழ். நூலகம் சிறப்பான நிலையில் இருந்தது. அச்சியந்திர சாதனங்கள் எழுமுன்பாக கையால் எழுதப்பட்ட சுவடிகள், பனையோலை வாசகங்கள் இப்படியாக தொல்பொருள் நிலையம் போன்று யாழ். நூலகம் செயற்பட்டு வந்தது. நூலக காங்கிரஸில் யாழ். நூலகம் அங்கத்துவம் வகித்தது.

தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்ட சுமார் ஒரு லட்சம் புத்தகங்கள், சுவடிகளைக் கொண்ட அழகிய நூல் நிலையம் சிங்களப் பேரினவாதிகளால் எரிக்கப்பட்ட இந்தச் சம்பவம் தமிழ்இன அழிப்பு என்ற சிங்கள இனவாதிகளின் மன எண்ணத்தை உலகிற்கே வெளிப்படுத்தியது எனலாம். வரலாற்றுப் புகழ்வாய்ந்த யாழ். நூலகத்தின் மற்றோர் சிறப்பு அந்தக் கட்டடத்தின் சிற்ப அமைப்பே எனலாம். யாழ் நூலகக் கட்டடம் தமிழரின் வரலாற்றுப் பொக்கிசமாகவே அனைவரையும் கவர்ந்தது.

அக்காலத்தில் இந்த நூல் நிலையம் எரிக்கப்பட்ட செய்தியை முற்றாக இருட்டடிப்புச் செய்ய ஜெ.ஆர். அரசாங்கம் முயற்சித்தது. இந்தச் சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு ஒரு கோடி ரூபா நஷ்டஈடு வழங்குமாறு அரசாங்கத்தைப் பணித்தபோதும் நட்ட ஈட்டுத் தொகையாக ஒரு ரூபாவைக் கூட வழங்க ஜே.ஆர். அரசாங்கம் முன்வரவில்லை.

இந்த நூல் நிலைய எரிப்பு மூலம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மூட்டிய தீயின் வெம்மை இனவிடுதலைப் போராட்டத்துக்கு மேலும் உரமூட்டியது என்பதே உண்மை.

சர்வாதிகாரி, கொடூர ஹிட்லர் கூட தன் படைகளுக்கு இட்ட கட்டளைகளில் ஒன்று நூல் நிலையங்களை அழிக்கக்கூடாது என்பதாகும். ஆனால் ஜே.ஆரின் படைகள் அதனையும் விட்டு வைக்காமல் எங்கள் அணையாத அறிவாலயத்தை எரித்து, மாறாத வரலாற்று வடுவை தமிழ்மக்கள் மனதில் ஏற்படுத்தினர்.

தமிழ் மக்களின் அரிய சொத்தாக யாழ். நூலகம் விளங்கியது. தமிழ் வாசகர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் நாடிச் செல்லும் ஒரு கேந்திர நிலையமாக அது அமைந்தது. தமிழ் மக்களின் தேசிய மேம்பாட்டின் அடையாளமாகவே யாழ். நூலகம் விளங்கியது.

தமிழர்மேல் எழுந்த ஆத்திரம், பகைமை, எரிச்சல் அவர்களுடைய சொந்த நூலகத்தின் மேலே அரச பயங்கர வாதத்தால் இந்த நூலகம் தீக்கிரையானது. இவ்வாறான பண்பாட்டு மையங்களை அழித்து இன்னோர் இனத்தின் எரிச்சலுக்கும் பகைமைக்கும் கொடுமைக்கும் காலாயுள்ள கருத்தோட்டங்களைப் 'பேரினவாதத்தின் உச்சக்கட்டம் என்றே குறிப்பிடுவர்.

பெரும்பான்மையான ஓர் இனம் சிறுபான்மையினரை ஒடுக்கும் சிறுமையை நோக்கிய அவமானச் செயலாக இந்த நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. இதற்காக மன்னிப்புக் கோரவோ நட்டஈடு வழங்கவோகூட முன்வராத ஜே.ஆர் ஜெயவர்த்தனவும் அவரது படைகளும் பின்னரும் பல சிறிய நூலகங்களைச் சிதைத்தமை கசப்பான வரலாறுதான்.

பண்பாட்டுப் படுகொலையின் அதி உச்சமான இந்தக் கொடூர நிகழ்வை அகிலம் பூராக வெளிப்படுத்த வேண்டும். மனித வாழ்வியத்தின் இழுக்கேடாக நிகழ்ந்த கலாச்சாரப் படுகொலையான யாழ். நூலகத்தின் எரிப்பை தமிழ் மக்கள் என்றும் நினைவு கூர்ந்து கொள்வர். யாழ். நூலகம் எரிந்தமை சந்ததி மறவாச் சரித்திரமாக வரலாற்றில் நிலைத்து நிற்கும்.



# ஆயுள்வேத மருந்து உற்பத்தியை ஊக்குவிக்க நாடு முழுவதும் சமூக மூலிகைத் தோட்டங்கள்

(றியாஸ் ஆதம்)

இலங்கையில் ஆயுள்வேத மருந்துகளை உற்பத்தி செய்வதற்கு உரிய மூலிகைகள் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. குறிப்பாக இந்தியா, நைஜீரியா, ஈரான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து பெரும்பாலான மூலிகைகளைப் பெற்று குறித்த மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்காக பெருமளவு நிதியை அரசு செலவிட்டு வருகிறது.

இதற்காக செலவிடப்படும் செலவீனங்களை குறைத்து உள்நாட்டில் தொழில் வாய்ப்பை ஊக்குவித்து பாரிய திட்டமிடல்களுடன் ஆயுள்வேத மருந்துகளை உள்நாட்டிலே உற்பத்தி செய்வதற்கு சுதேச மருத்துவத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க சுதேச மருத்துவத் திணைக்களம் நாடு தழுவிய ரீதியில் சமூக மூலிகைத் தோட்டங்களை நிறுவுவதற்கு உரிய பாரிய வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தைக் கிழக்கு மாகாணத்தில் செயற்படுத்துவதற்கு போதுமான வளங்கள் இருப்பதால் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் மூலிகைத் தோட்டங்களை அமைப்பதற்கு உரிய ஆரம்பக் கட்டப் பணிகளை சுதேச மருத்துவத் திணைக்களம் முன்னெடுத்து வருகிறது.

கிழக்கு மாகாணத்தில் குறித்த திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று புதன்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆணையாளர் டாக்டர் எம்.ஏ.நபீல் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுதேச மருத்துவத் திணைக்களத்தின் உயரதிகாரிகள், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆயுள்வேத வைத்தியர்கள், ஆயுள்வேத வைத்திய சாலைகளில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் பொருத்தமான இடங்களில் மூலிகைத் தோட்டங்களை அமைப்பது தொடர்பாகவும் சிறு பண்ணையாளர்களையும் தோட்ட செய்கையாளர்களையும் ஊக்குவித்து அவர்களிடம் இருந்து மூலிகைகளைப் பெற்று மருந்துகளை உற்பத்தி செய்து ஆயுள்வேதத் துறையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.





# சாய்ந்தமருதில் போதைப்பொருள் எதிர்ப்பு மகளிர் எழுச்சி மாநாடு!

(நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளை வலுவூட்டும் நோக்கில் சமுதாய அமைப்பின் நிர்வாகிகளுக்கு அடையாள அட்டை வழங்கி வைக்கும் நிகழ்வு வியாழக் கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.ஏ.நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடையாள அட்டைகளை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, சமுர்த்தி வங்கி சங்கத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல். ஜஃபர், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களை வழிநடத்தும் அபிவிருத்தி உத்தியோகத்தர் றிகாஸா ஷர்பீன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எம். அபுல் ஹுதா, எம்.எம். ஜாபீர், சமுர்த்தி பிரதேச சமுதாய அமைப்பின் தலைவர் கே.எம்.கபீர், பொருளாளர் யூ.எல். ஜுனைதா உள்ளிட்ட சமுதாய அடிப்படை அமைப்புகளின் நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சமுதாய அடிப்படை அமைப்புகளின் நிர்வாகிகள் 200 பேருக்கு இந்த அடையாள அட்டைகள் வழங்கி வைக்கப்பட்டன. சாய்ந்தமருதில் மே 31 – ஜுன் 17 வரை வீடு வீடாக போதைப்பொருள் மற்றும் புகைத்தல் எதிர்ப்பு பிரச்சாரத்தை மேற்படி சமுர்த்தி சமுதாய அமைப்புக்களின் நிர்வாகிகள் உள்ளிட்ட உறுப்பினர்கள் மேற்கொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஜுன் 04 ஆம் திகதி சாய்ந்தமருதில் போதைப் பொருள் எதிர்ப்பு மகளிர் எழுச்சி மாநாடு நடத்துவதற்கு இதன்போது தீர்மானிக்கப் பட்டது.



# இதுவரை ஊழல் செய்யாதவர்களை தேர்தலில் தேர்ந்தெடுக்க வேண்டும்

## மாணவர்களுக்கு விஜய் அறிவுரை





இதுவரை ஊழல் செய்யாதவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

உறுதியாக இருந்தால் நிச்சயம் சாதிக்க முடியும் என்றும் பாடசாலை மாணவர்களுக்கு விஜய் அறிவுரை வழங்கியுள்ளார்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 10, பிளஸ் 2 வகுப்புகளில் தொகுதி வாரியாக சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு, தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கல்வி விருது வழங்கும் விழா, மாமல்லபுரம் அருகே தனியார் சொகுசு விடுதியில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் விஜய் உரையாற்றுகையில்,

“கல்வியில் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. நீட் தேர்வு மட்டும் உலகம் அல்ல. நீட்டை தாண்டிய இந்த உலகம் ரொம்ப பெரியது. அதில், நீங்கள் சாதிக்க வேண்டியது நிறைய உள்ளது. அதனால், உங்களின் மனநிலையை மிகவும் தைரியமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஜனநாயகம் என்ற ஒன்று இருந்ததால் தான், இந்த உலகம் சுதந்திரமாக இருக்க முடியும்.

பணம் கொடுத்து வாக்கு வாங்கி வெற்றி பெற்று விடலாம் என நினைப்பவர்களின் செயலை ஊக்கப்படுத்த வேண்டாம். பணம் வாங்காதீர்கள், உங்களின் பெற்றோரையும் வாங்க வேண்டாம் எனக் கூறுங்கள். அதைப் பின்பற்றுங்கள். ஆனால், அடுத்த ஆண்டு பாருங்கள் வண்டி, வண்டியாக கொண்டு வந்து கொட்டுவார்கள். அத்தனையும் உங்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம்தான். நல்லவர்கள், நம்பிக்கையானவர்கள், இதுவரை ஊழல் செய்யாதவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு பெற்றோர் மிகவும் அழுத்தம் கொடுக்க வேண்டாம். அவர்களுக்கு பிடித்த துறைகளில் சாதித்து காட்டுவார்கள். அதேபோல், சாதி, மதத்தை வைத்து பிரிவினை வளர்க்கும் சிந்தனை பக்கம் செல்லாதீர்கள். விவசாயிகள், தொழிலாளர்கள் சாதி, மதம் பார்த்து பொருட்களை உற்பத்தி செய்யவில்லை. அவற்றை போதை பொருட்களைப்போல ஒதுக்குவதுதான் நல்லது. உறுதியாக இருந்தால் நிச்சயம் சாதிக்க முடியும்” - என்றார்.

பின்னர், பிளஸ் 2 வகுப்பில் தமிழக அளவில் 599 மதிப்பெண் பெற்று முதலிடம் பிடித்த மாணவி ஓவியா அஞ்சலி மற்றும் 10 ஆம் வகுப்பில் 499 மதிப்பெண் பெற்று முதலிடம் பிடித்த சோபியா ஆகியோருக்கு வைரத்தோடு மற்றும் பாராட்டு சான்றினை விஜய் வழங்கினார்.

பின்னர், 88 தொகுதிகளில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற 676 மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ். காசோலைகளை வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், அக்கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், தேர்தல் பிரிவு மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா மற்றும் மாணவ, மாணவிகள், பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில் 38 பேருக்கு கொரோனா தொற்று; பதற்றடைய தேவையில்லையென அறிவிப்பு





“தமிழகத்தில் 38 பேருக்கு கொரோனா தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் திரிபு உருமாற்றம் பெற்று வருகிறது. ஆனால், இது குறித்து மக்கள் பதற்றம் அடையத் தேவையில்லை. நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்கள் மட்டும் முகக்கவசம் அணிந்து கொள்ளலாம். மற்றபடி வதந்திகளைப் பரப்ப வேண்டாம்.”

- இவ்வாறு கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கை குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன்,

“தமிழகத்தில் 38 பேருக்கு கொரோனா தொற்று உள்ளது. கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் திரிபு உருமாற்றம் பெற்று வருகிறது. ஆனால், இது பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை. எனவே, மக்கள் இது குறித்து பதற்றம் அடையத் தேவையில்லை. புனே ஆய்வு மையத்துக்கு, தமிழகத்திலிருந்து 17 மாதிரிகள் சோதனைக்கு அனுப்பியுள்ளோம்.

மத்திய சுகாதார அமைச்சகம், முகக் கவசம் அணிவது நல்லது என்று தெரிவித்துள்ளது. அதையேத்தான் நாங்களும் வலியுறுத்துகிறோம். முகக்கவசம் அணிவது நல்லதே தவிர, எதுவுமே கட்டாயம் கிடையாது. அதுவும், எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளோர் பொது இடங்களில் முகக் கவசம் அணிவது நல்லது.

தமிழ்நாட்டில் மருத்துவக் கட்டமைப்பு, படுக்கை வசதிகள், ஒக்சிஜன் வசதி என எல்லாமே சிறப்பாக உள்ளது. மாவட்ட, தாலுகா தலைமை மருத்துவமனைகளிலும் எல்லா வசதிகளும் சரியாக உள்ளது.

இந்தச் சூழலில் கொரோனா பரவல் பற்றிய வதந்திகளை யாரும் பரப்பாதீர்கள். வதந்திதான் பெரிய நோய். சென்னை அரசு மருத்துவமனையில் முதியவர் ஒரு இறந்ததற்கு கொரோனா காரணம் அல்ல. அவருக்கு கட்டுப்படுத்தப்படாத நீரிழிவு நோய் இருந்தது. ஏற்கெனவே இருந்த அந்த இணை நோய் பாதிப்பாலேயே அவர் உயிரிழந்தார்.

கொரோனா தொற்றைப் பொருத்தவரையில், மத்திய அரசு வழிகாட்டுதல்களை எப்போதும் நாம் பின்பற்றுகிறோம். அவர்கள் ஒருவேளை விமான நிலையத்தில் கண்காணிப்பை தீவிரப்படுத்தச் சொன்னால், உடனடியாக அங்கே கண்காணிப்புக் குழு அமைப்போம். இப்போதைக்கு பதற்றப்படத் தேவையில்லை.

அதேபோல், தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் கட்டுக்குள்ளேயே இருக்கிறது. பருவமழைக் காலம் என்பதால் காய்ச்சல் முகாம்களும் நடத்துகிறோம்.” என்றார்.

# இறக்குமதி செய்யப்படும் அலுமினியத்துக்கான வரியை 50 சதவீதமாக அதிகரிக்கும் அமெரிக்கா



அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் உருக்கு மற்றும் அலுமினியம் என்பவற்றுக்கான வரியை 50 சதவீதமாக அதிகரிப்பதாக அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இதன்படி, மேற்படி பொருள்களுக்கான இறக்குமதி வரி 25 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக அதிகரிக்கப்படுகிறது.

பென்சில்வேனியாவில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இந்த முடிவு உள்ளூரில் உருக்கு மற்றும் அலுமினியம் என்பவற்றின் உற்பத்தி அதிகரிப்பிற்கு வழிவகுக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், உருக்கு மற்றும் அலுமினியம் என்பவற்றுக்காக, சீனாவைத் தங்கியிருக்க வேண்டிய தேவை குறைவடையும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.





# காசாவில் ஒட்டுமொத்த மக்களும் பஞ்சத்தை எதிர்கொள்கின்றனர்

## ஐக்கிய நாடுகள் சபை தகவல்

காசா பகுதியின் ஒட்டுமொத்த மக்களும் பஞ்சத்தை எதிர்கொள்வதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

காசா பகுதிக்குள் உணவு மற்றும் உதவி பொருள்கள் வழங்குவது இடைநிறுத்தப்பட்டதால் காசா மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் காயமடைந்த காசா மக்கள் மீது இஸ்ரேலிய படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாகவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

காசா பகுதியில் உள்ள 2.3 மில்லியன் மக்கள் தொகையில் 100 சதவீத்தினர் பஞ்சத்தை எதிர்கொள்கின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

# அரச பணி காலத்தில் போதைப் பொருள் பயன்பாடு: ஊடகத்தின் குற்றச்சாட்டுக்கு எலான் மஸ்க் மறுப்பு

அமெரிக்காவின் அரசு செயல்திறன் துறையில் பணியாற்றிய காலத்தில் போதைப் பொருள்கள் பயன்படுத்தினார் என்ற 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகையின் குற்றசாட்டினை உலக கோடீஸ்வரரான எலான் மஸ்க் மறுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தின் ஒரு பகுதியாக அரசு செயல்திறன் துறையில் தொழில்நுட்ப ஜாம்பவான் எலான் மஸ்க் பணியாற்றிய காலத்தில் அவரிடம் அடிக்கடி போதைப் பொருள் பயன்பாடு மற்றும் ஒழுங்கற்ற நடத்தை இருந்ததாக 'நியூயோர்க் டைம்ஸ்' செய்தியைக்காட்டி தகவல் அறிந்தவர்கள் தெரிவித்தனர்.



அந்தக் கட்டுரையில், 'எலான் மஸ்க் கேட்டமைன், எக்ஸ்டசி போதை வஸ்துக்கள் மற்றும் சைக்டெலிக் காளான்களை உட்கொண்டார். அது அவரின் அரசுப் பணி குறித்து கேள்விகளை தூண்டியது." என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. என்றாலும் தனது பணிநிறைவு நாளில் பேசிய மஸ்க், பத்திரிகையின் மீது குற்றம்சாட்டி பிரச்சினையை திசைதிருப்பினார்.

ஃபாக்ஸ் செய்திகளின் பீட்டர் டூசி, நியூயோர்க் டைம்ஸ் செய்தி பற்றி மஸ்கிடம் கேட்ட போது, "ரஷ்யா -கேட் பற்றி பொய்யான செய்தி வெளியிட்டு புலிட்சர் பரிசு வாங்கிய அதே நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையா? அதே நிறுவனமா? நான் அப்படிதான் நினைக்கிறேன். ரஷ்யா - கேட் பற்றிய பொய்யான செய்தி வெளியிட்டதற்காக நியூயோர்க் டைம்ஸுக்கு எதிராக நீதிபதி தீர்ப்பளித்தார். அவர்கள் தங்களின் புலிட்சர் பரிசைத் திருப்பித் தரக் கேட்டிருக்கலாம். நாம் வேறு பேசலாம்." என்று எலான் மஸ்க் தெரிவித்தார்.

இதனிடையே, வெள்ளை மாளிகையின் பணியாளர்களின் துணைத் தலைவர் ஸ்டீபன் மில்லரிடம், மஸ்க்கின் போதைப் பொருள் பயன்பாடு குறித்து கேட்கையில் அவர், "தெற்கு எல்லையில் கொட்டப்படும் போதைப் பொருள்கள் குறித்து நாங்கள் கவலை கொள்கிறோம். அடுத்த கேள்வி." என்று மஸ்க் அந்த கேள்வியைத் தவிர்த்தார்.

கனடா முரசு

சனிக்கிழமை 31/05/2025

**வயோதிப பெண் குத்திக் கொலை; 14 வயது சிறுவன் மீது குற்றச்சாட்டு**

கனடாவில் வயோதிப பெண் ஒருவரை குத்திக் கொலை செய்துள்ளார் என 14 வயதான சிறுவன் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிக்கரிங் நகரத்தில் இந்த சம்பவம் இடம்பெற் 02




# பிரிட்டிஷ் கொலம்பியாவில் குறைந்தபட்ச சம்பளம் அதிகரிப்பு

**பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் குறைந்தபட்ச சம்பளம் ஜூன் 1 முதல் 17.85 டொலர்களாக உயர்த்தப்பட உள்ளது. இது தற்போதைய 17.40 டொலர்களாக காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.**

**இதன்படி சம்பளத் தொகை 45 சதத்தினால் உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

**இந்த உயர்வு, குடியிருப்புப் பாதுகாவலர்கள், குடியிருப்பில் வசிக்கும் ஆதரவு பணியாளர்கள், முகாம்களில் பணிபுரியும் தலைவர்கள் மற்றும் ஆப் மூலம் உணவு மற்றும் பயண சேவையில் ஈடுபடும் பணியாளர்களுக்கும் பொருந்தும்.**

"பணியாளர்களுக்கு உறுதிப்பாடு வழங்கவும், வணிகங்களுக்கு எதிர்பார்க்கக்கூடிய சூழலை உருவாக்கவும், அரசு குறைந்தபட்ச ஊதியத்தை படிப்படியாக, ஒழுங்காக உயர்த்தி வருகிறது," என புதன்கிழமை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, குறைந்தபட்ச சம்பளம் வருடந்தோறும் பணவீக்க அளவுக்கேற்ப தானாகவே உயர்த்தப்படும் அரசின் நான்காவது ஆண்டு உறுதிமொழியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவின் மாகாணங்களில், பிரிட்டிஷ் கொலம்பிய தற்போது அதிகபட்ச குறைந்தபட்ச ஊதியத்தைக் கொண்டுள்ளது.




# மிசிசாகாவில் கத்திக் குத்து தாக்குதல்; இருவர் மருத்துவமனையில் அனுமதி

கனடாவின் மிசிசாகா நகரில் இருவர் கத்தியால் குத்தப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம், பாய்லன் சாலை மற்றும் டெல்ஃபோர்டு வேயில் அமைந்துள்ள பகுதியில், டெர்ரி மற்றும் ப்ரமலியா சாலைகளுக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

பீல் பிராந்திய பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

அங்கு இரண்டு ஆண்கள் காயங்களுடன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்கள் இருவரும் தீவிர காயங்களுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இருவரும் உயிருக்கு ஆபத்து இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் எதனால் ஏற்பட்டது மற்றும் அதற்கு முன் என்ன நடந்தது என்பதை பற்றி தீவிரமாக விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் தகவல் உள்ளவர்கள், பீல் பொலிஸாரை அல்லது கிரைம் ஸ்டாப்பர்ஸ் சேவையை அநாமதேயமாக தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# கனடாவுக்கு படிக்க சென்ற இந்திய மாணவர் மாயம்






கனடாவுக்கு கல்வி கற்பதற்காகச் சென்ற இந்திய மாணவர் ஒருவர் மாயமாகியுள்ளார்.

சாஹில் குமார் (வயது 22) என்ற மாணவன் ஏப்ரல் மாதம் இந்தியாவின் ஹரியானாவிலிருந்து கனடாவுக்குக் கல்வி கற்பதற்காகச் சென்றுள்ளார்.

இம்மாதம் 16ஆம் திகதி அவர் , ஹாமில்ட்டனில் தான் தங்கியிருந்த வீட்டிலிருந்து, ரொரன்றோவில் தான் கல்வி கற்கும் Humber கல்லூரிக்குப் புறப்பட்டுள்ளார்.

1.00 மணியளவில், தனது கல்லூரி இருக்கும் இடத்துக்கு அருகே மேற்படி மாணவன் நடமாடும் காட்சிகள் சி.சி. ரி.வி. கமெராவில் பதிவாகியுள்ளன. அதற்குப் பிறகு அவரைக் காண வில்லை.

அந்த மாணவன் வாரம் ஒரு முறை தவறாமல் வீட்டுக்கு தொலை பேசி மூலம் தொடர்புகொண்டுள்ளார்.

ஆனால், மே மாதம் 16 ஆம் திகதி, 11.49 மணிக்கு ரொரன்றோ ரயில் நிலையத்திலிருந்து தன் பெற்றோ ரிடம் பேசிய அவரின் தொலைபேசி 1.31 மணிக்கு அணைக்கப்பட்டுள்ளது.

இன்றுவரை மேற்படி மாணவன் என்ன ஆனார், அவர் எங்கே சென்றார் என்பது குறித்து எந்த தகவலும் இல்லை. இதற்கிடையில், மகனுக்கு என்ன ஆயிற்று என்று தெரியாமல் இந்தியா வில் அவரது குடும்பத்தினர் கவலை யில் ஆழ்ந்துள்ளார்கள்.




# பஸ் விபத்தில் சிறுவன் பலி

கனடாவின் மேற்கு வான்கூவரின் ஹார்ஸ்ஷூ பே கடற்படகு நிலையம் அருகே ஏற்பட்ட விபத்தில், 4 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் அவரின் தாயும், அவரது நண்பியும் காயமடைந்துள் ளனர் என்று பொலிஸார் தெரிவித் தனர்.அந்த சிறுவன் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்துள்ளார் என மேற்கு வான்கூவர் பொலிஸாரிடம் கூறி யுள்ளனர்.

சிறுவனின் தாய் ஆபத்தான நிலை மையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். தாயின் தோழியும் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பஸ் சாரதியிடம் விசாரணை நடை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். வேகம் காரணமாக இருக்க வாய்ப்பில்லை என தெரிவிக் கப்படுகிறது.

## வயோதிப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுள்ளது. இந்த கொலை சம்பவத்தில் 80 வயதுக்கு மேற்பட்ட வயோதிப பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் 14 வயது சிறுவன் மீது முதல் நிலை கொலைக்குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டு இளைஞர் குற்றவியல் நீதிக்கான சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சந்தேகநபர் சிறுவனாக இருப்பதால் அவரை பொதுவெளியில் அடையாளம் காண அனுமதிக்கப்பட வில்லை. இந்தச் சம்பவத்தையடுத்து, நகராட்சி பொதுமக்களுக்கு வீட்டில் தங்குமாறு உத்தரவு வழங்கியது.

அத்துடன், பொதுத் தளங்கள் மூடப் பட்டன, வகுப்புகள் மற்றும் நிகழ்வுகள் இரத்து செய்யப்பட்டன.

இந்த சம்பவம் பிக்கரிங்கில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குற்ற வாளியின் நடவடிக்கைகள், பின்னணி



மற்றும் உறவுமுறைகள் குறித்து பொலிஸார் விரிவான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.




# இராணுவத்தின் போர் திறனை உயர்த்துவதற்கு புதிய ஆயுதத்தை கொள்வனவு செய்யும் கனடா

இராணுவத்தின் போர் திறனை உயர்த்த Carl-Gustaf M4 எனும் ஆயுத அமைப்பை கனடா வாங்குகிறது.

கானடா அரசு, தன்னுடைய தரைப் படையின் திறனை மேம்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, ஸ்வீடன் நிறுவனமான சாபிடம் (Saab) இருந்து Carl-Gustaf M4 வகை போர் ஆயுதத்தையும் Fire Control Device (FCD) 558-யையும் வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்த ஒப்பந்தம், சாபுக்கும் கானடாவுக்கும் இடையிலான நீண்ட கால கூட்டமைப்பை மேலும் வலுப்படுத்துகிறது.

Carl-Gustaf M4 உலகளவில் 40 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

தற்போது, Carl-Gustaf M4-ஐ ஏற்கும் நாடுகளின் பட்டியலில் கனடா இணைந்துள்ளது.

“இது Saab-ன் சமகால போர்த் திறன் கொண்ட ஆயுதங்களுக்கு உலகளாவிய தேவை உள்ளதை காட்டுகிறது. கனடா எங்கள் முக்கிய வாடிக்கையாளர், அவர்களின் போர்த் திறனை மேம்படுத்த உதவுவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்,” என்று SaabCanada தலைவர் சைமன் கேரோல் கூறியுள்ளார்.

இந்த ஆயுதத்தின் புதிய M4 பதிப்பு குறைந்த எடை கொண்டது, மின்னணு அமைப்புகளுடன் ஒருங்கிணைக்கக்கூடியது, மேலும் நவீன குண்டுகள் மற்றும் intelligent sighting அமைப்புகளைப் பயன்படுத்தும் திறனைக் கொண்டது.

இந்த ஆயுதம் ஆர்மர் வாகனங்கள், உறுதியாக்கப்பட்ட கட்டிடங்கள், எதிரி படைத் தொகுதிகள் போன்ற பலவிதமான போர் சவால்களுக்கு எதிராக செயல்பட வீரர்களுக்கு துணை புரிகிறது. எளிதில் கையாளக் கூடியதாகவும் பல்துறை பயன்பாடுகளுடன் கூடியதாகவும் இது உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய ஒப்பந்தம், கனடா தரைப்படையின் செயல்திறனை மேம்படுத்தும் முக்கிய முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

